

“சாதிக்க முடியாத ஒன்றுக்காக கடவுள் என் ஆசைகளைத் தூண்ட மாட்டார்; எனது குறைபாட்டிலும், புனிதனாகும் நம்பிக்கை எனக்குண்டு”

– புனித லிசியு திரேசாக

‘உங்களிடமிருந்து இறையாட்சி அகற்றப்படும்; அவ்வாட்சிக்கு ஏற்ற முறையில் செயல்படும் ஒரு மக்களினத்தார் அதற்கு உட்படுவர்’

ஐயோ! எம்மாதிரியான கடவுளுடன் நாம் தொடர்பு வைத்திருக்கிறோம்? கடவுள் நியாயவாதியா அநியாயவாதியா? திருவழிபாட்டு காலண்டரின் பாதியைக் கடந்து விட்ட நிலையில், சிலுவை வரையில் இயேசுவைப் பின்பற்றுபவர்களாக நாம் உருவாகி இருக்க வேண்டும். அவரிடம் அனைத்தும் அர்ப்பணிக்க நாம் எண்ணுகிறோம். ஆனால் இடையில் தவிக்கிறோம். நமது நம்பிக்கை நட்சத்திரமாக அவர் இருக்கிறார். பதற்றமும் பிளவும் கொண்ட இந்த உலகத்தில் சிரமத்தையும் வேதனையையும் பெரும் சவால்களையும் எதிர்நோக்கும் சூழ்நிலையில் நம்பிக்கை ஒளியாக இயேசுவை வரவேற்கும் நாம், சந்திக்கும் ஒவ்வொரு மனிதரிடமும் நம்பிக்கை அளிக்கும் அவரது இறையரசு பற்றிப் பகிர்ந்து கொள்ள நாம் தயாராகயிருக்கிறோம். நீதியும் சமத்துவமும் அதிகாரத்தின் கைப்பாவையாகவும் ஜனநாயகம் அந்நியமாகவும் இருக்கும் ஊழல் நிறைந்த பரிதாபத்திற்கு உரிய உலகத்தில் தொடர்ந்து வாழ்வதற்கான காரணமில்லாம் போகிறது. பாழாய்ப்போன இந்த காலக்கட்டத்தில் மேற்குறிப்பிட்ட நிலையைக் காண்பது வெறும் கனவே. தொழில்நுட்ப வளர்ச்சியால் உறவுமுறையில் இடைவெளி ஏற்பட்டு, ஈடுபாடும் அக்கறையும் கரைந்து போகின்றன. நேரில் உறவாடுதல் தூரமாகி விட்டது. மனிதாபினமாக உலகத்தை உருவாக்குவதில், மனுக்குலத்தையும் அதன் போக்கையும் நம்பிக்கை கொள்ள முடியுமா?

இன்றைய விவிலிய வாசகங்கள், கண்காணிப்பாளர் பற்றி விவரிக்கின்றன. நிராகரிக்கப்பட்ட, ஏளனம் செய்யப்படு ஒதுக்கப்பட்ட மூலைக்கல்லைத் தேர்வு செய்வதற்கான முக்கிய நபர், கண்காணிப்பாளர். அந்த கல்லை, நாம் ஏற்றுக்கொள்ளவுமில்லை, அதனை நமது எதிர்காலத்திற்கான அடிக்கல் என ஒப்புக்கொள்ளப்படவில்லை.

உண்மையிலேயே நம்பிக்கையை நாம் விரும்பினால், அதற்காக நாம் உழைக்க வேண்டும். அந்த மூலைக்கல்லின் சீடர்கள் பிடிப்பட்டு, கொலை செய்யப்பட்ட போதிலும் போராட்டம் தொடர்கிறது. அறியா பிரதேசத்திற்குள்ளும் நுழைந்து, அறுவடை பலனைக் காண விசுவாசம் கொண்டோர் அதனைத் தொடர்கின்றனர். மூலைக்கல்லான இயேசு கிறிஸ்துவின் உறுதியான சீடர்களைப் போல் நமது தற்கால போராட்டமும் தொடர்கிறது. களைகளை அகற்றி எரிய, அவரது திராட்சை தோட்டத்திற்கு நம்மை அனுப்புகிறார் இயேசு. போர் கடினமாக இருந்தாலும், இந்த சவால்களை எதிர்நோக்க நாம் தயாராக உள்ளோம். வாழ்க்கை போராட்டத்தில் நம்பிக்கை இழந்தவர்களின் நம்பிக்கை ஒளியாக, மூலைக்கல்லோடு கைகோர்த்து நின்றால், யாரும் நம்மை அசைக்க முடியாது. நம்பிக்கையின் சிலுவையை நோக்கி முன்னேறி செல்வோம். இது பலனளிக்கும் என்ற நம்பிக்கையில் நல்மனதோர் அனைவருடனும் விறு நடைப் போடுவோம். சமாதானம், அன்பு, நல்லெண்ணம், அரவணைக்கும் ஆவியின் துணையால், நம்பிக்கை எனும் திராட்சை தோட்டத்தில் வெற்றிக் களிப்புடன் நுழைவோம். ✢

Published by: Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org
Print: Steno Print Sdn Bhd
Design: The Mustard Seed Studio

INTERNAL CIRCULATION ONLY

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

NEWREC

8 அக்டோபர் 2017
பொது காலம்
27ம் ஞாயிறு



# பலனளிப்போருக்கு நம்பிக்கையின் கண்காணிப்பாளராக இருப்போம்




**மினவுதல் மாதா தேவாலயம்**
85A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே : 06-762 4468 / 763 4934 / 767 7542
தொ.நகல் : 06-767 7544
Email: : serembanvisitation@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. அன்ட்ரூ கூய்


*2017 ஆம் ஆண்டின் கருப்பொருள்:*
**எதிர்நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்**
*2017 அக்டோபர் (ஐப்பசி) மாதத்தின் கருப்பொருள்:*
*எல்லை தாண்டிய சாட்சியம்*

## மினவுதல் தேவாலயத்தின் 170ஆம் ஆண்டை நோக்கிய பயணம்
## ( 1848 – 2018 )

**பங்கு அலுவலக நேரம்:**
**திங்கள் - வெள்ளி:** காலை 8.30 - மாலை 5.30
**சனி :** காலை 8.30 - மாலை 7.30
**ஞாயிறு :** காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்:** பொதுக்காலம் (ஆண்டு ஒன்று) 27ஆம் ஞாயிறு சனி 07-10-2017 ஞாயிறு 15-10-2017

**எசா 5: 1 – 7 தி.பா 79: 9, 12, 13-14, 15-6, 19-9, பிலிப் 4: 6-9 மத் 21: 33-44**

**ஆண்டவருடைய திராட்சைத் தோட்டம் இஸ்ராயேல் குடும்பத்தாரே ( சங் 79 )**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 07 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (பு. புருனோ 3) | |
| ஞாயிறு | 08 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>1.00 ம | திருப்பலி தமிழ் ( பு. சிசிலியா)<br>திருப்பலி ஆங்கிலம் (பு. ஆர்தர்)<br>திருப்பலி சீனமொழி<br>மாலை 4.30 தித்தி (சீன மொழி)<br>திருப்பலி (தே.மொ) | மறைக்கல்வி (த) காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு ( முகிபுவ )**<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |
| *செல்லப் பிராணிகளுக்கான விசேட ஆசீர் (புனித பிரான்சிஸ் அசிசியாரின் திருவிழா) மாலை 5.00 மணி, மாதா கெபியின் முன்* | | | | |
| திங்கள் | 09 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 10 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 11 | 6.45 கா | திருப்பலி | |
| வியா | 12 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 13 | 6.45 கா | திருப்பலி | |

**பொதுக்காலம் 28ஆம் ஞாயிறு : ( ஆண்டு ஒன்று)**

**எசா 25: 6 – 10a தி.பா 2: 1-3a 3b-4 5, 6, பிலிப் 4: 12-14, 19-20 மத் 22: 1-14 அல்லது (1-10)**

**நான் ஆண்டவரின் இல்லத்தில் நெடுநாள் வாழ்ந்திருப்பேன். ( சங் 22 )**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 14 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (பு. பெர்னாடின் 1) | |
| ஞாயிறு | 15 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>1.00 ம | திருப்பலி தமிழ் ( பு. பெட்ரிக்)<br>திருப்பலி ஆங்கிலம் (பு. பெர்னாடின் 2)<br>திருப்பலி சீனமொழி<br>**திருப்பலி (தே.மொ) நடைபெறாது** | மறைக்கல்வி (த) காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு ( முகிபுவ )**<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

**2017 அக்டோபர் (ஐப்பசி) மாத செய்திகள் / நிகழ்வுகள்**

1. **ஆலய காணிக்கை 30 செப் 01 அக் ரிம: 8,917.95**
   சமூக அக்கறைப் பணிக்குழு ரி.ம : 6,300.25
   இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!
2. **மினவுதல் தேவாலய பங்கு மக்களுக்கு வாழ்த்துகள்.** செப் 16 மலேசிய தினத்தன்று மலேசிய கொடியைப் பறக்கவிடுவோம் என்ற போட்டியில், நெகிரி மாநில அளவில் நம்முடைய தேவாலயம் பரிசை வென்றது. அக்டோபர் 09, 2017 அன்று மாநில முதலமைச்சர் நமக்கு அந்த பரிசினை வழங்குவார்.
3. **லூத்தரன் -கத்தோலிக்க திருச்சபை நினைவுகூரும் ஆராதனை நிகழ்ச்சி:** 28 அக்டோபர் 2017(சனிக்கிழமை) பகல் 2.30 மணிக்கு பெட்டாலிங் ஜெயா லூத்தரன் சென்டரில் நடைபெறும். கலந்துகொள்ள ஆர்வமுள்ளோர் பங்கு அலுவலகத்தில் உங்கள் பெயர்களைப் பதிந்துகொள்ளுங்கள்.

➢ **மறைக்கல்வி மாணவர்களுக்கு சிறப்பு திருமுழுக்கு (அனைத்து மொழி)** மறைக்கல்வி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் பெற்றோர்களின் கவனத்திற்கு: உங்களுடைய விண்ணப்ப படிவங்களை தேவைப்படும் சான்றிதழ்களோடு பங்கு அலுவலகத்தில் அக்டோபர் 15, 2017 க்குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

➢ **ஃபோர்ம்ட் (FORMED) பின்பற்றுவதற்கு ஒரு பயிற்சி**
33 நாட்கள் செப வழிபாடு - ஆங்கிலத்தில் நடைபெறும் இந்த செபவழிப்பாட்டு முறையைக் கற்றுக்கொள்ள அழைக்கிறோம்.
நாள்: 21 அக்டோபர் காலை 8.30 - பகல் 1.00 வரை
மறைக்கல்வி ஆசிரியர்கள்/பணிக்குழு பொறுப்பாளர்கள்/அதிச , வட்டார பொறுப்பாளர்கள், இளைஞர்கள், மற்றும் ஆர்வமுள்ள பங்கு மக்கள் அனைவரையும் இதில் பங்கேற்க அழைக்கிறோம். திருப்பலிகளுக்குப் பின் இதற்கான பதிவுகள் நடைபெறும். (குறிப்பு: உங்களுடைய விவேக தொலைபேசி, விவேக நோட்புக் உடன் கொண்டுவர மறக்க வேண்டாம்)
தொடர்புக்கு: எரிக் 012-297 2413

➢ **மாமறைமாவட்ட மனநல ஆரோக்கிய நாள்:** நாள்: அக்டோபர் 14, 2017 (சனிக்கிழமை) காலை 8.00 முதல் மாலை 5.00 வரை
இடம்: புனித இக்னேசியஸ் ஆலயம், பெட்டாலிங் ஜெயா
பதிவு நாள் இன்று 8-10-2017, தொடர்பு: பங்கு அலுவலகம்

*திருமண கொண்டாட்டம்:*
கோகிலன் & டயானா ராபர்ட்: 14-10-2017 காலை 11.00 மணி
கிறிஸ்டியன் ராகேஷ் & நிஷா மரியான்: 14-10-2017 மாலை 3.30மணி

➢ **அக்டோபர் 2017 - அதிச மற்றும் வட்டாரங்களில் நடைபெற இருக்கும் திருப்பலிகளின் அட்டவணை:**

**9/10 (திங்கள்) வட்டாரம் - 6 (பு.தெரேசா சிற்றாலயம்)** ராசா நியு வில்லேஜ் (டொறீன் எங் - 017 332 6007)

**10/10 (செவ்): வட்டாரம் -7 (புனித பீட்டர்) 502,** ஜலான் மேராக் 1, தாமான் திவி ஜெயா ( புளோரன்ஸ் -014-261 2285)

**11/10 (புதன்): வட்டாரம் 8 (புனித லூக்கா) 3320, R/J 5/8,** தாமான் ராசா ஜெயா (வில்லியம்- 012-650 8245)

**12/10 (வியாழன்) வட்டாரம் 9 (புனித மாற்கு) 29,**ஜலான் மெர்போக் ரியா, தாமான் புக்கிட் ரியா ( சார்ல்ஸ் 012-3820471)

**13/10 (வெள்ளி) வட்டாரம் 10 (புனித பிலிப்பு) 1** ஜலான் பிடாரா 13, தாமான் பிடாரா (அருமை 012 660 8190)

➢ **அக்டோபர் - செபமாலை மாதம்:** அனைத்து அதிச க்களும் செபமாலை பக்திமுயற்சியை இல்லங்களில் செபிக்க அழைக்கிறோம். வட்டார பொறுப்பாளர்கள் உங்களுடைய வட்டாரங்களில் செபமாலை மற்றும் திருப்பலிகள் நடைபெறுவதை நினைவில் கொள்ளுங்கள்.
தொடர்புக்கு: ஜோன் மெய்னார்ட் (012- 665 6411)

➢ **மினவுதல் மாதா தேவாலயத்தின் 170 ஆம் ஆண்டை நோக்கிய பயணம்**
- நினைவுப்புத்தகம்: இதை வடிவமைக்க தன்னார்வலர்கள் தேவைப்படுகிறார்கள். உங்களுடைய உதவிகரத்தை இதில் இணைக்க விரும்பினால் தொடர்புகொள்ளுங்கள்; சார்ல்ஸ் பெர்னாண்டஸ் (012-3820471)
- இதன் தொடர்பாக உங்களிடம் பழைய புகைப்படங்கள் இருந்தால் கொடுத்து உதவுங்கள். பங்கு அலுவலகத்தை நாடுங்கள்
- **மாறைக்கல்வி மாணவர்களின் (அனைத்து மொழி) கலாச்சார நிகழ்வு** : 18-11-2017 (சனி) மாலை 7.30 மணி, ஆலய மண்டபம், அனைவரையும் வரவேற்கிறோம்.

➢ **ஆலய உடைமைகளைப் பராமரித்தல்** (உ..ம்.தொலைக்காட்சி, மேசை நாற்காலிகள் மற்றும் பல) பயன்படுத்தியபின் எடுத்த இடத்திலேயே மீண்டும் அதை வைத்துவிடுமாறு கேட்டுக்கொள்கிறோம். தயவுசெய்து ஆலய உடைமைகளைப் பயன்படுத்தும்போது பொறுப்போடு நடந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

➢ **நோயுற்றிருப்போர், நோயுற்று வீட்டில் இருப்போருக்கு நற்கருணை:** அனைத்து வட்டார, அதிச நற்கருணைப் பொறுப்பாளர்கள் அந்தந்த வட்டாரங்களில் உள்ள முதியோர், நோயுற்றோர், நடக்கமுடியாமல் வீட்டிலிருப்போர் அனைவரையும் சந்தித்து, ஒவ்வொரு வாரமும் நற்கருணை வழங்க ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

➢ **திருப்பலிக்கு முறையான உடை உடுத்திவருதல்:** திருப்பலியில் பங்குகொள்ள வரும் பங்கு மக்கள், பொறுப்பாளர்கள், திருப்பலி வழிபாடுகளில் பங்கு கொள்வோர் அனைவரும் நேர்த்தியான மற்றும் சரியான உடை உடுத்தி திருப்பலி கொண்டாட்டத்தில் பங்கெடுக்குமாறு நினைவுறுத்துகிறோம்.

➢ **100 வாரங்களில் விவிலியம் புதிய ஏற்பாடு ஆரம்பம்** : 23-10-2017 (திங்கள்) அன்றிலிருந்து புதிய ஏற்பாட்டு நூல்களைப் பற்றிப் பகிர்ந்துகொள்ளவிருக்கின்றோம். ஆர்வமுள்ளவர்கள் இதில் கலந்து கொள்ளவும்.
தொடர்புக்கு : ரீத்தா சேவியர் 016 307 1991

- **பங்கு மேய்ப்புப்பணி மாநாடு: 15/10/2017(ஞாயிறு) பகல் 2-5** வரை மினவுதல் தேவாலய மண்டபத்தில் நடைபெறும். (பதிவுகள் அனைத்து திருப்பலிகளுக்குப் பின்னர் நடைபெறும்)
- **15-10-2017 (ஞாயிறு) தே.மொழி திருப்பலி (மதியம் 1.00 மணி) நடைபெறாது**
- **குருக்களின் மாதாந்திர தியானம்: 16 & 17 அக்டோபர் APC, கோலாலம்பூர் (திங்கள் & செவ்வாய்)**
- **மறைதிரு ஜோர்ஜ் ஹரிசன் அவர்கள்** : 16 - 20 அக்டோபர் பிற சமயங்களுக்கிடையிலான (FABC) ஒன்றுகூடலுக்காக பாங்கொக் செல்கின்றார்
- **ஆலய மீடியா குழுவினரின் ஒன்றுகூடல் :** 28-10-2017 காலை 9.00 மணிக்கு விவிலிய அறை
- **தமிழ் அப்போஸ்தலர் பணிக்குழு ஒன்றுகூடல்** : 10-10-2017 மாலை 8.00 மணிக்கு விவிலிய அறை
- **நற்கருணை ஆராதனை மாநாடு 2017 11/11/2017 காலை 8.30 மாலை 4.00 வரை** பெட்டாலிங் ஜெயா புனித் இக்னேசியஸ் ஆலயத்தில் நடைபெறும். அனைத்து திருப்பலிகளுக்குப் பின் இதற்கான பதிவு நடைபெறும். (தொடர்புக்கு: ஸ்பென்சர்: 012- 325 6718)